Find us on facebook/tamilmirror
Follow us on tamilmirror
epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
TUESDAY, JANUARY 16, 2024

செவ்வாய்க்கிழமை ஜனவரி 16, 2024 | ஒளி: 10 கதிர் 172 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# 1,468 பேர் கைது



நாடு முழுவதும், குற்றச் செயல்களில் ஈடுபட்ட மொத்தம் 42,248 சந்தேக நபர்களில் 1,468 பேர் கடந்த 24 மணி நேரத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 42,248 சந்தேக நபர்களின் விரிவான பட்டியலை பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், சகல பொலிஸ் நிலையங்களிலும் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரிகளிடம் கடந்த சனிக்கிழமை கையளித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# யாழில் இரு வாரங்களில் 775 பேருக்கு டெங்கு

■ எம்.றொசாந்த்



யாழ். மாவட்டத்தில் கடந்த இரண்டு கிழமைகளில் மாத்திரம் 775 பேர் டெங்கு காய்ச்சலுக்கு உள்ளாகி உள்ளனர். அதேவேளை, கடந்த டிசெம்பர் மாதம் யாழில் ஐந்து பேர் டெங்கு காய்ச்சலுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# அரச செலவுகள் மேலும் குறைப்பு



நாட்டின் பொருளாதார நிலைமையை கருத்திற் கொண்டு அரச நிறுவனங்களின் செலவுகளை மேலும் மட்டுப்படுத்துமாறு திறைசேரியின் செயலாளர் மகிந்த சிறிவர்தன சுற்றறிக்கை மூலம் அரசாங்க தலைவர்களுக்கு மீண்டும் அறிவித்துள்ளார்.

இதனால் கூடுதல் நேர ஊதியம், விடுமுறை ஊதியம், இதர கொடுப்பனவுகள் மற்றும் பயணச் செலவுகள் ஆகியவை ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டிற்குள் மட்டுமே செலவிடப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம், நீர், தொலைபேசி சேவைகள், எரிபொருள் மற்றும் ஒப்பந்த சேவைகளுக்கான செலவினங்களைக் குறைக்க செலவுக் கட்டுப்பாட்டு முறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்றும், எழுதுபொருட்கள் மற்றும் அலுவலகத் தேவைகளுக்காக பொருட்களை வாங்குவது கடுமையான கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு இருக்க வேண்டும் என்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ வாகனங்களை வைத்திருக்கும் அதிகாரிகளுக்கு வாகனங்களை ஒதுக்கும் போது, ஏனைய அதிகாரிகளுடன் இணைத்துக் கொள்ள நிர்வகிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# பதுளைக்கு பயணித்த பேருந்து பற்றி எரிந்தது




தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பெலியத்த நுழைவாயிலுக்கு அருகில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று திங்கட்கிழமை (15) பிற்பகல் தீப்பிடித்து எரிந்துள்ளது.

தீப்பற்றி எரிந்த பேருந்தில் இருந்தவர்கள் அனைவரும் பேருந்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர் மற்றும் பயணிகள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

பேருந்து முற்றாகத் தீப்பிடித்து எரிந்ததுடன் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2




### தற்போதைய அரசாங்கத்தின்
# “வரி கொள்கையே வாட்டி வதைக்கிறது”

வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு என நாட்டில் நாலா பகுதிகளிலும் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம், பேகர்கள் என அனைத்து இன மக்களும் நாட்டில் நிலவும் வங்குரோத்து நிலை காரணமாக மிகவும் உதவியற்ற நிலைக்கு ஆக்கியுள்ளனர்.

தொடர்ச்சி P2

# நாகபூசணி அம்மன் ஆலயத்தில்...



தைப்பொங்கல் தினமான திங்கட்கிழமை (15), யாழ்ப்பாணம் – நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று, ஆலய முன்றலில் பொங்கல் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

– எம்.றொசாந்த்



### டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுநிலை காணப்பட்டால்
# உள்ளூராட்சி சபைகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

■ எம்.றொசாந்த்

உரிய முறையில் கழிவுகளை அகற்றாத பட்சத்தில், அந்தக் குப்பைகளிலிருந்து டெங்கு பரவக்கூடிய ஏதுநிலை ஏற்பட்டால், தொடர்புடைய உள்ளூராட்சி சபைகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என யாழ்.

தொடர்ச்சி P2



### ஜனாதிபதி ரணில்
# தேசிய வேட்பாளராக முன்வர வேண்டும்
### 3 மாவட்டங்களில் ஏகமனதாக தீர்மானம்

களுத்துறை, ஹம்பாந்தோட்டை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாடுகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் தேசிய வேட்பாளராக முன்வர வேண்டும் என ஏகமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன இந்த பிரேரணையை அந்த மாநாடுகளுக்கு முன்வைத்தார்.

மாநாட்டில் பங்கேற்ற கட்சித் தலைவர்கள், கட்சி உறுப்பினர்கள் கைகளை உயர்த்தி ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றினர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட மாநாட்டில் இது தொடர்பான முன்னதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# பசியை போக்க பாக்கு பிடுங்கியவர் மரணம்

■ ஷேன் செனவிரத்ன

இரண்டு நாட்களாக எவ்விதமான உணவும் உட்கொள்ளாது பட்டினியால் வாடிய நபரொருவர், மற்றொருவருக்குச் சொந்தமான பாக்கு மரத்திலேறி, பாக்கு திருட முற்பட்டவேளையில், மரத்திலிருந்து தவறிவிழுந்து மரணமடைந்த சம்பவமொன்று கடுகண்ணாவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசமொன்றில் இடம்பெற்றுள்ளது.

கடுகண்ணாவை- கம்பளை வீதியில் நாவுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த மாரிமுத்து மனோகரன் (வயது 30) என்பவரே உயிரிழந்துள்ளார்.


தொடர்ச்சி P2

### இணையவழி கடன் விவகாரம்
# சீன பிரஜைகள் ஐவர் கைது

இணையவழி மூலமான கடன் வழங்கும் நிலையமொன்றை தெஹிவளையில் சுற்றிவளைத்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர், சீன பிரஜைகள் ஐவர் உட்பட அறுவரைக் கைது செய்துள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பின்போது, மடிக்கணினிகள் உட்பட 19 கணினிகள் 62 தொலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2




### களப்பில் அம்மாவின் பிறந்தநாள் கொண்டாட்டம்
# காதல் ஜோடி, மாணவி மூவரும் உயிரிழந்தனர்

பிறந்தநாளை கொண்டாடுவதற்கான களுத்துறை வித்தியாலயத்துக்கு முன்பாக இருக்கும் களப்புக்கு, ஞாயிற்றுக்கிழமை (14) சென்றிருந்த 15 மற்றும் 16 வயதுகளுடைய மாணவிகள் இருவரும் 17 வயதான மாணவனும் உயிரிழந்துள்ளனர் என களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை பன்வில பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட இவாங்கி மதுஹாஷினி (வயது 15) தொடங்கொட நவிலியாவத்தை பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட கிவிந்து சத்சர (வயது 17) மற்றும் தொடங்கொட ரதுகுருச பிரதேசத்தில் வசிக்கும் சுபானி சுபேசலா (வயது 16) ஆகியோரே மரணமடைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# மகர சங்கராந்திக்கு முன்பாக பொங்கல் கொண்டாடிய மோடி



தமிழர்களின் முக்கிய விழாக்களில் ஒன்றான பொங்கல் விழாவின்போது, பலர் தங்கள் அலுவலகங்களிலும் வீடுகளிலும் பொங்கல் விழாவைக் கொண்டாடினர். அதன்படி, இந்தியாவின் மத்திய மாநில அமைச்சர் எல்.முருகன் வீட்டில் திங்கட்கிழமை (15) பொங்கல் விழா நடைபெற்றது. இதில், பிரதமர் மோடி பங்கேற்றார்.

தமிழர்களின் பாரம்பரியத்தை அறிவிக்கும் கரகாட்டம், சிலம்பாட்டம், பாடல் போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் பொங்கல் திருவிழா கொண்டாடப்பட்டது. பொங்கல் விழாவில் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சித்தாராமன், தெலுங்கானா ஆளுநர் தமிழ்நாடு சவுண்டரராஜன், ஜார்க்கண்ட் ஆளுநர் சிபி ராதாகிருஷ்ணன் மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், பிரதமர் மோடி, மகர சங்கராந்திக்கு முன்பாக தனது இல்லத்தில் மாடுகளுக்குப் புல் மற்றும் உணவை வழங்கினார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# யாழில் இருவாரங்களில் 775 பேருக்கு டெங்கு

வடமாகாண மாகாண டெங்கு நிலைமை தொடர்பான மீளாய்வு கூட்டம், ஆளுநர் பி.எஸ். எம்.சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்றபோதே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் மாத்திரம் 775 டெங்கு நோயாளர்கள் யாழ். மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். கடந்த வருடம் முழுவதும் 3,986 டெங்கு நோயாளர்களே பதிவாகியதுடன் ஆறு மரணங்களும் பதிவாகியது. இதில் ஐந்து கடந்த டிசெம்பர் மாதத்திலே பதிவாகியுள்ளது.

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகள் தம்மால் இயன்ற அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றன. எனினும், பொதுமக்கள் தங்களின் பொறுப்புக்களை உணர்ந்து செயற்படுவதில்லை. தமது சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்காத 1,542 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அதில் 147 இடங்கள் தொடர்பில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

"கிராமப்புறங்களை விட படித்த சமூகம் அதிகமாக வசிக்கும் இடங்களிலே சூழல் பாதுகாப்பு மிக மோசமாகக் காணப்படுகிறது" என கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

"சூழலைச் சுத்தமாகப் பேணாது நுளம்பு பரவும் வகையில் செயற்படுவோருக்கு எதிராகப் பாரபட்சம் இன்றி நடவடிக்கை எடுங்கள். இந்த செயற்பாடுகளுக்கு பொலிஸாரின் ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். வீதிகளில் பொதுவான இடங்களில் குப்பைத் தொட்டிகளை வைத்து, அதனை உரியவாறு பராமரியுங்கள். இவ்வாறான செயற்பாடுகளில் பொதுமக்களை உள்வாங்கி உள்ளூராட்சி நிறுவனங்கள் செயற்பட வேண்டும்" என ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அதிகாரிகளுக்குப் பணித்தார்.

இதேவேளை, பொதுமக்களும் சமூகப் பொறுப்புக்களை உணர்த்து செயற்படுவது இன்றியமையாதது என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# "வரிக் கொள்கையே வாட்டி வதைக்கிறது"

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தன்னிறைவு வாழ்க்கை முறையைக் கொண்டிருந்த எமது நாடு, தற்போதுள்ள அரசாங்கத்தின் தூரநோக்கற்ற தன்னிச்சையான ஆட்சியினாலேயே இவ்வாறு கடுமையான வங்குரோத்து நிலைக்குச் சென்றுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இந்த வங்குரோத்து நிலையால் நிர்க்கதிகளைச் சந்தித்து வரும் இந்நாட்டு மக்களை மேலும் சிரமங்களுக்குள் தள்ளுவதற்கு தற்போதைய அரசாங்கத்தின் வரிக் கொள்கையே காரணம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தைப் பொங்கல் நாளான திங்கட்கிழமை (15) எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற தைப்பொங்கல் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில்,விவசாயப் பொருட்களுக்குக் கூட வரி விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அரிசி உள்ளிட்ட மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில், ஒரு நாடாக நாம் தொடர்ந்து இவ்வாறே பார்த்துக் கொண்டிருப்பதா அல்லது ஜனநாயகத்திற்காக எழுந்து நிற்பதா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும். இந்த நல்ல நோக்கத்திற்காக எழுந்து நிற்கத் தைரியம் கிட்டப் பிரார்த்திப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

நாம் அனைவரும் அனைத்து மதங்களையும், இனங்களையும்,சாதிகளையும் சமமாக மதிக்க வேண்டும். அதுவே நமது நாட்டின் முன்னேற்றப் பயணத்திற்குக் காரணமாக அமையும். எந்தவொரு பாகுபாடுமின்றி ஒவ்வொரு குடிமகனுக்கும் அவருக்குரிய கௌரவம் வழங்கப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தொழில்நுட்ப புரட்சியை நோக்கிச் சென்று, குறைந்த இட வசதியில் கூடிய அறுவடை பெறக்கூடிய முறைகளைப் பின்பற்றி இயற்கையை மதிக்கும் வாழ்க்கை முறையை நாம் பின்பற்றியொழுக வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# அரச செலவுகள் மேலும் குறைப்பு

பயிற்சிப் பட்டறைகள் நடத்துவதற்கு ஹோட்டல்கள், மாநாட்டு அரங்குகளைப் பயன்படுத்தக் கூடாது என்றும், அதற்காக அரசு நிறுவனங்களுக்குச் சொந்தமான மாநாட்டு அரங்குகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு அனுசரணை செய்யும் நிறுவனங்கள் முழுச் செலவையும் ஏற்காத பட்சத்தில், வெளிநாட்டுக் கடன் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் நிதியை வெளிநாட்டுப் பயணங்களில் அரசு அதிகாரிகள் பங்கேற்கக் கூடாது என்றும், வெளிநாட்டு ஆய்வுப் பயிற்சி கலந்துரையாடல் மாநாட்டுப் பயணங்களில் அதிகாரிகள் ஈடுபடக் கூடாது என்றும் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்தியோ அல்லது அமைச்சரவையின் கொள்கை முடிவுகளின்படியோ திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்ட கட்டிடங்களைத் தவிர அனைத்து புதிய கட்டிடங்களையும் கட்டத் தொடங்கக்கூடாது என்றும், தொடங்கப்பட்ட கட்டிடங்களை முடிக்க முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அறநிலையத்துறையின் முன் அனுமதி பெறாமல் அரசு தேவைகளுக்குக் கட்டிடங்களை வாடகைக்கு விடக்கூடாது என சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதுடன், அரசுக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத கட்டிடங்களை உகந்த முறையில் பயன்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு திட்டங்கள் தொடர்பான கட்டணங்கள் அல்லது ஆண்டில் செலுத்த வேண்டிய கட்டணங்களைச் செலுத்துவதற்கான ஏற்பாடுகளை ஒதுக்காமல் மற்ற பணிகளைத் தொடங்கக்கூடாது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

தேசிய விழாக்கள் என ஆண்டு மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள செயல்பாடுகளுக்குத் தவிர, விழாக்கள், கூட்டங்கள், கண்காட்சிகள், மாநாடுகள், திறப்புகள், மாநாடுகள் போன்றவற்றுக்கு அரசு நிதியைப் பயன்படுத்தக் கூடாது என்று சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முறையான அனுமதியின்றி, அத்தியாவசிய பணியிடங்களை நிரப்பவோ அல்லது புதிதாக ஆட்சேர்ப்பு செய்யவோ கூடாது என சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கையை அனைத்து அமைச்சகச் செயலாளர்கள், மாகாண தலைமைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள், மாநிலக் கழகப் பல்கலைக்கழக மானியக் குழு மற்றும் சட்டப்பூர்வ வாரியங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் தலைவர்களுக்குக் கடந்த 10ஆம் திகதி திகதியிட்டு அனுப்பியுள்ளார்.

# உள்ளூராட்சி சபைகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரட்ன மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது டெங்குத் தொற்று அபாய கட்டத்தில் காணப்படுகின்றது. டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற போதும், டெங்குத் தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்குப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரட்னவால் குறித்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அறிவுறுத்தலில், டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான நிலைகளைக் கொண்ட, நீர்த் தேங்கும் வகையில் கழிவுகளைக் கொண்டுள்ள குடியிருப்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும், வெற்றுக் காணிகளைப் பராமரிக்காத உரிமையாளர்கள் மற்றும் பொறுப்பானவர்கள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும், டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான நிலைமைகளைக் கொண்டுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மீது எந்தவித சமரசமும் இன்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அத்துடன், உரிய முறையில் கழிவுகளை அகற்றாத பட்சத்தில், அந்தக் குப்பைகளிலிருந்து டெங்கு பரவக்கூடிய ஏதுநிலை ஏற்பட்டால், தொடர்புடைய பிரதேச சபைகள், நகரசபைகள், மாநகர சபை என்பவற்றுக்குப் பொறுப்பான பிரதேச சபைச் செயலாளர், மாநகர சபை ஆணையாளர்களுக்கு எதிராகவும் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளார்.

# 1,468 பேர் கைது

35,505 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களாகவும், 4,258 சந்தேக நபர்கள் கைரேகைகள் மூலம் அடையாளம் காணப்பட்டவர்களாகவும் மற்றும் 2,485 நபர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் நாட்டில் நடந்த குற்றங்களுக்காக தேடப்பட்டு வருகின்றனர் எனவும் குறித்த பட்டியல் சுட்டிக்காட்டுகிறது.

பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு இணங்க , பிரிவு அதிகாரிகள், மாவட்ட பொறுப்பாளர்கள், தலைமையக ஆய்வாளர்கள் ,அனைத்து பொலிஸ் நிலையங்களின் குற்றப்பிரிவு நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் ஞாயிற்றுக்கிழமையில் இருந்து (14) முன்னெடுக்கப்பட்டு வரும் 'யுக்திய' நடவடிக்கையில் தீவிரமாக பங்கேற்றனர். அதன்படி, பட்டியலில் இருந்த 1,468 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

பட்டியலிலிருந்து கைது செய்யப்பட்டவர்களில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 1,198 பேரும், கைரேகைகள் மூலம் அடையாளம் காணப்பட்ட 4,258 தேடப்படும் சந்தேக நபர்களில் 123 பேரும், கடந்த இரண்டு ஆண்டுகளில் நாட்டில் நடந்த குற்றங்களுக்காக 149 சந்தேக நபர்களும் தேடப்பட்டு வருவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

# சீன பிரஜைகள் ஐவர் கைது

கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த மோசடி அம்பலமானது

இணையவழி மூலம் கடன் பெறும், கடனாளியின் அலைபேசி இலக்கம், தனிப்பட்ட தகவல்களை, சமூக வலைத்தளங்களில் தரவேற்றம் செய்துவிடுவதாக அச்சுறுத்தி கடன்தொகையின் தவணைகளை பெற்றுக் கொண்டமையும் விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகள், கணினி குற்றத்தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்படடு வருகின்றது.

அதேநேரம், இவ்வாறான முறைப்பாடுகள் இருப்பின் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணனிப் புலனாய்வுப் பிரிவினருக்கோ தெரிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

# பசியை போக்க பாக்கு பிடுங்கியவர் மரணம்

இவர், திருமணமாகாதவர் என்பது விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

நாவுல்ல பிரதேசத்தில் உள்ள காணியொன்றுக்குள் சட்டவிரோதமாக நுழைந்து. பாக்கு மரத்தில் ஏறிக்கொண்டிருந்தபோதே கீழே விழுந்து மரணமடைந்துள்ளார் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

சடலம் பிரேதப் பரிசோதனைக்காக, கண்டி தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

கண்டி தேசிய வைத்தியசாலையின் நிபுணர் சட்ட வைத்தியர் ஏ.பி. ஜெயசூரிய சடலத்தின் தடயவியல் பரிசோதனையின் போது உயிரிழந்தவர் இரண்டு நாட்களாக உணவு உண்ணவில்லை என தெரியவந்துள்ளது.

# காதல் ஜோடி, மாணவி மூவரும் உயிரிழந்தனர்

மரணமடைந்த மாணவிகள் இருவரும் இவ்வருடம் கல்விப்பொதுத் தராதர பரீட்சைக்குத் தோற்றவிருப்பவர்கள் என்றும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

மரணமடைந்த மாணவன், மரணமடைந்த மாணவிகளில் ஒருவரின் காதலன் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

அதிலொருவரின் தாயாரின் பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில், கடலுக்குச் சென்று வினோதமாக நீராடிக்கொண்டிருந்த போதே, இவ்வாறு நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளனர். முதன்முறையாக களுத்துறை கடலில் நீராடிய இவர்கள் உயிரிழந்த மாணவி ஒருவரின் வேண்டுகோளுக்கு இணங்க களுகங்கை களப்புக்கு நீராட வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முதலில் இரண்டு மாணவிகள் நீரில் மூழ்கியதாகவும், அவர்களை காப்பாற்ற மாணவன் முயன்றபோது அவரும் நீரில் மூழ்கி உயிரிழந்ததாகவும் கூறப்படுகிறது.

அபாயக்குரல் எழுப்பப்பட்ட போது, அருகில் படகுகளில் இருந்தவர்கள் அவர்கள் மூவரையும் மீட்டு 1990 சுவசெறிய அம்புலன்ஸ் வண்டியில் ஏற்றி, நாகொட போதனா வைத்தியசாலைக்கு கொண்டுச் சென்றுள்ளனர் எனினும், வழியிலேயே அவர்கள் மரணமடைந்துவிட்டனர்.

# பதுளைக்கு பயணித்த பேருந்து பற்றி எரிந்தது

இதன் காரணமாக பெலியத்த நுழைவாயிலில் இருந்து சகல நுழைவாயில் வரையான நெடுஞ்சாலைப் பகுதி மூடப்பட்டுள்ளதுடன், சகல நுழைவாயிலில் இருந்து வெளிவரும் வாகனங்கள் மீண்டும் பெலியத்த நுழைவாயிலில் நுழையும் என பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து பதுளையை நோக்கி பயணித்த அதிசொகுசு பேருந்தே இவ்வாறு தீப்பிடித்து எரிந்துள்ளது.

## 2 தமிழ் அரசியல் கைதிகளுக்கு

# பொங்கலன்று பொதுமன்னிப்பு

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் இருவர், ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளில் ஈடுபட்டதாகக் குறிப்பிட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டங்களின் கீழ் தண்டனை பெற்று ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த இரண்டு தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் பரிந்துரையின் பேரில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நாகலிங்கம் மதன்சேகர் மற்றும் செல்லத்துரை கிருபாகரன் ஆகிய கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்ட பின்னர் இருவரும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர். இதில் மதன்சேகருக்கு 2023ஆம் ஆண்டு மார்ச் 29ஆம் திகதி ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இதேவேளை, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்றச்சாட்டில் கிருபாகரன் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டதை அடுத்து 2022 ஜூலை 20 ஆம் திகதி அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டாம் வினாத்தாளை கசிய விட்ட ஆசிரியர் கைது

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் விவசாய விஞ்ஞானத்தின் இரண்டாம் வினாத்தாளை, பரீட்சை நடைபெறுவதற்கு முன்னரே சமூக வலைத்தளங்களில் தரவேற்றம் செய்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், அம்பாறை டீ.எஸ்.சேனாநாயக்க தேசிய பாடசாலையில் விவசாய விஞ்ஞான ஆசிரியர் கைது செய்யப்பட்டு, எதிர்வரும் 26ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட 52 வயதான ஆசிரியர், அம்பாறை மேலதிக நீதவான் மற்றும் நீதவான் சத்துரிக்கா எம். சந்திரதிலக்கவின் முன்னிலையில் முன்னிறுத்தியபோதே நீதவான் மேற் கண்டவாறு உத்தரவிட்டார். பரீட்சை திணைக்களம் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணையில் தெரியவந்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் ஆசிரியர் கைது செய்யப்பட்டதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

விவசாய விஞ்ஞான வினாத்தாள் கடந்த 10ஆம் திகதி இடம்பெற்றதுடன், பரீட்சைக்கு முன்னதாக சமூக வலைத்தளங்களில் வினாத்தாள் பரப்பப்பட்டமையினால் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசூரிய அதனை இரத்து செய்துள்ளார்.

இரத்து செய்யப்பட்ட, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் விவசாய விஞ்ஞானத்தின் இரண்டாம் வினாத்தாளை மீள் நடத்துவதற்கான விசேட பரீட்சையைப் பெப்ரவரி 01 திகதி காலை 8.30 மணிமுதல் 11.40 மணிவரை நடத்துவதற்கு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, இம்மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடையவிருந்த 2023(2024) உயர்தரப் பரீட்சை பெப்ரவரி 01ஆம் திகதி நிறைவடையும் எனவும் அன்றைய தினம் அனைத்துப் பரீட்சை நிலையங்களும் வழமை போன்று நடைபெறும் எனவும் பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.



## விசேட பூஜைகள்...

கொச்சிக்கடை பொன்னம்பலவாணேசுவரர் திருக்கோவிலில் தைத்திருநாளான திங்கட்கிழமை (15) அன்று விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன.

படங்கள் : பிரதீப, திலுருக்ஷன்



















### இரு கட்சிகளின் கொள்கைகள்

# “வானமும் பூமியும் போன்றவை”




சோசலிசம் என்று கூறும் நாடுகளில் சோசலிசம் உண்மையில் நடைமுறைப்படுத்தப் படுவதில்லை. சோசலிச, கம்யூனிச சோசலிச நாடுகள் என்று அழைக்கப்படும் நாடுகள் தீவிர முதலாளித்துவத்தையே செயல்படுத்தி வருகின்றன. சீனாவில் அமெரிக்காவை விட முதலாளித்துவம் அமுல்படுத்தப்படுகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் ஞாயிற்றுக்கிழமை (14) நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் கொள்கையை வெளியீட்டு வைக்கும் Blue Print நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஒரு நாட்டைக் கட்டியெழுப்பவும், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் சோசலிசம் வழியல்லாது, முதலாளித்துவமே ஒரே வழி. ஐக்கிய தேசியக் கட்சி க்ரோனி முதலாளித்துவத்தை பின்பற்றும். அதேவேளையில், ஐக்கிய மக்கள் சக்தி மனிதாபிமான முதலாளித்துவத்தைப் பின்பற்றுகிறது. ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இங்கு தான் வேறுபடுவதுடன், ஐக்கிய மக்கள் சக்தி சமூக ஜனநாயகக் கொள்கையை நம்புகிறது, அது மனிதாபிமான முதலாளித்துவமாகும்.

அத்துடன், உள்நாட்டு கடனை மறுசீரமைப்பில் இந்த அரசாங்கம் பெரும் செல்வந்தர்களை கைவிட்டு, உழைக்கும் மக்கள் மீது வரிகளை சுமத்தியது. இது மனிதாபிமானமற்ற முதலாளித்துவம். வங்குரோத்தான நாட்டில் தியாகங்கள் செய்யப்பட வேண்டும் என்றாலும், அனைத்து தியாகங்களையும் உழைக்கும் மக்களின் தோள்களில் சுமத்தி பெரும் பணக்காரர்களைப் பாதுகாக்கும் மனிதாபிமானமற்ற போக்கில் ஐக்கிய மக்கள் சக்தி இல்லை. இதன் பிரகாரமே, ஐக்கிய மக்கள் சக்திக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் பாரிய வித்தியாசம் இருக்கின்றதுடன், இந்த இரண்டு கட்சிகளும் ஒன்றல்ல என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளர்.



## அயோத்தி இராமர் கோவில் குடமுழுக்கு பிரார்த்தனை

கொட்டாஞ்சேனை ஶ்ரீ இராதாகிருஷ்ண ஆலயத்தில், அயோத்தி ராமர் கோவில் குடமுழுக்கு தொடர்பான விசேட பிரார்த்தனை 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் மாலை 7.00 மணிக்கு (பாராயணம்) நடைபெறவுள்ளது.

இந்தியாவில் உள்ள ஶ்ரீராம ஜென்ம பூமியான அயோத்தியில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ள வரலாற்று சிறப்புமிக்க ஶ்ரீ ராமர் கோவில் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 12.33க்கு கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

உலகெங்கும் அமைதியும், செழிப்பும் ஏற்பட வேண்டும் என்று இந்த மங்களகரமான கும்பாபிஷேக வேளையில் பகவான் ஶ்ரீராமச்சந்திரரை வேண்டி பல்வேறு நாடுகளில் பிரார்த்தனைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், இதன் ஓர் அம்சமாக கொட்டாஞ்சேனை ஶ்ரீ இராதாகிருஷ்ண ஆலயத்திலும் விசேட பிரார்த்தனை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



### STEM உயர்கல்வி நிலையத்தை

## சப்ரகமுவையில் ஆரம்பிக்க ஏற்பாடு

சிவா ஶ்ரீதரராவ்

இந்தியாவும் சப்ரகமுவ மாகாண சபையும் இணைந்து 800 மில்லியன் ரூபாய் செலவில் STEM உயர்கல்வி நிலையத்தை உடனடியாக ஆரம்பிக்கப்பட உள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

வரக்காபொல - அல்கம ஆரம்ப பாடசாலையில் வெள்ளிக்கிழமை (12) இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, கல்வியும் விளையாட்டும் முதன்மை வகிக்கின்றன. அதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும். அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் ஆகியவை நவீன கல்வியின் கருத்துக்கள் எனலாம். சப்ரகமுவ மாகாணத்தில் ஏழைக் குழந்தைகளுக்கு STEM கல்வியை வழங்குவதே இதன் நோக்கமாகும். அதற்காக 600 மில்லியன் ரூபாவைப் பயன்படுத்த இந்தியா ஒத்துக் கொண்டுள்ளது.

அத்துடன், அரசாங்கத்தின் பூரண அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்தப்படும் இந்த STEM கல்வி மையத்திற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்து இரண்டு மில்லியன் ரூபாய் நிதியைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றேன் என்றும் நவின் திசாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

## இடம் பெயர்ந்தோருக்கு நிவாரணம் வழங்கி வைப்பு

ரீ.எல்.ஜவ்பர்கான்



மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாரிய வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டு கோறளைப்பற்று தெற்கு (கிரான்) பிரதேச செயலகத்துக்குட்பட்ட பாலையடித்தோணா ஶ்ரீமுருகன் வித்தியாலயத்துக்கு இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கான உலருணவுப் பொருட்கள் சிறைச்சாலைகள் திணைக்கள உத்தியோகத்தர்களினால் திங்கட்கிழமை (15) வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் கல்முனைச் சிறைக்கூட உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட நிதியிலிருந்து சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருட்களே இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் என். பிரபாகரனின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதான ஜெயிலர் வீ.ஜீ.பானுக, சிரேஷ்ட ஜெயிலர் ஜே.சீ.ஹென்றிக் உள்ளிட்ட நலன்புரி சங்க உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

### பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகிய

## மாணவர்களுக்கு நிதியுதவி

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகி பட்டப்படிப்பை தொடர்வதற்கு பண வசதி இல்லாத மாணவ, மாணவிகளுக்கு ஞாயிற்றுக்கிழமை (14) நிதியுதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தினால் மாவட்ட கிளை அலுவலகத்தில் 2024ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களுக்கான நிதியுதவி திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்கத் தலைவர் எஸ்.குகதாஸனினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பதினொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட 65 மாணவ, மாணவிகளுக்கு இந்நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கலுக்கு மத்தியில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகி பண வசதி இன்மையால் பட்டப் படிப்பை தொடர முடியாத நிலையிலும், தந்தையை இழந்து கல்வியை தொடர முடியாத நிலைமையில் இருப்போருக்கே இந்த நிதியுதவி வழங்கிவைக்கப்பட்டன.

இதன்போது நலன்புரிச் சங்கத்தின் தலைவர் எஸ்.குகதாஸன்



தெரிவித்துள்ளதாவது, “எதிர்காலத்தில் நாட்டிற்காக சமூக நோக்குடன் போராடக்கூடிய இளைஞர், யுவதிகளை உருவாக்க வேண்டும் என்ற நோக்கிலேயே இவ்வாறான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், சிறந்த கல்வியைப் பெற்று திருகோணமலை மாவட்டத்தில் இன்னும் கல்விமான்களை உருவாக்க வேண்டும் எனவும் அதற்காகவே பல்கலைக்கழக மாணவ மாணவிகளை தெரிவு செய்துள்ளோம்” என தெரிவித்துள்ளார்.

மேலும் நலன்புரி சங்கத்துணைத் தலைவர் டொக்டர் என்.சரவணபவன், பொருளாளர் இராசரத்தினம் கோகுலதாசன் ஆகியோர் இதற்கான காசோலைகளை வழங்கி வைத்துள்ளனர்.

இதற்கான நிதி உதவியைக் கனடாவில் உள்ள திருகோணமலை நலன்புரிச் சங்கம் வழங்கி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் கைக்குண்டுடன் இளைஞன் கைது

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - இளவாலை பகுதியில் கைக்குண்டுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (14) பொலிஸார் வீதி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்தபோது, வீதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த இளைஞனை வழிமறித்து சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, இளைஞனின் உடமையில் இருந்து கைக்குண்டை மீட்டுள்ளனர்.

இதனை தொடர்ந்து இளைஞனை கைது செய்த பொலிஸார், பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்தபோது, திருட்டு சம்பவங்கள் சிலவற்றுடன் இளைஞனுக்கு தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது.

தொடர்ந்தும் இளைஞனை பொலிஸ் காவலில் வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சட்டத்தை காப்போருக்கு ஒழுக்கமும் கட்டுப்பாடும் அவசியமாகும்

நாடளாவிய ரீதியில் தற்போது முன்னெடுக்கப்படும் யுக்திய திட்டத்தின் கீழ், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், நீதிமன்றங்களில் ஆஜராகாது தலைமறைவில் வாழ்ந்தவர்கள், பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் என பல்வேறான குற்றச்சாட்டுகளில் தேடப்பட்டு வருபவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சோதனை நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள், வீடுகளில் தனியாக இருக்கும் பெண்களிடம் சேஷ்டைகளில் ஈடுபடுவதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இது, யுக்திய திட்டத்துக்குக் களங்கத்தை ஏற்படுத்துவதுடன், இந்த திட்டத்துக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது.

இதற்கிடையே, கருத்து தெரிவித்திருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, வீடுகளில் இருப்போர் கைது செய்யப்படுவதால், இளம் வயது பெண்கள், பாலியல் தொழிலுக்கு இறங்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்களின் சிறுவயது பிள்ளைகள் அநாதையாக்கப்படுவதாகவும் குற்றஞ்சாட்டினார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பாதாள உலக நாடுகளின் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுக்காமல் ஒரு சிறந்த நாட்டை உருவாக்க இரவு பகலாக அளப்பரிய அர்ப்பணிப்புடன் பொலிஸாரும் உழைக்கின்றனர்.

தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் குடிபோதையில் ரகளையில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அதே காவல்நிலையத்தில் பணிபுரியும் துணை ஆய்வாளர் சொந்த பிணையில் விடுவிக்கப்பட்டு, பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார் சாதாரண குடிமகனாக நடந்து கொள்ள முடியாது. அவர் சட்டத்தை மதித்து நடக்க வேண்டும். ஒழுக்கமாக இருக்க வேண்டும். வார்த்தையின் ஒவ்வோர் அர்த்தத்திலும் முன்மாதிரியாக இருக்கவே வேண்டும்.

உண்மைகள் அப்படியே இருந்தாலும் பிரபல நடிகையை முச்சக்கரவண்டியில் வைத்து பாலியல் பலாத்காரம் செய்ததாகக் கூறப்படும் முச்சக்கரவண்டி சாரதியாக பணிபுரிந்த பொலிஸ் பரிசோதகர் பிலியந்தலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர், இலஞ்ச ஊழல் விசாரணைப் பிரிவில் இணைக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் உத்தியோகத்தர் பணிக்கு மேலதிகமாக, அவர் முச்சக்கர வண்டி சாரதியாகவும் பணியாற்றுகிறார், அநேகமாக தற்போதைய மோசமான பொருளாதார சூழலில். ஆனால், ஒரு சாதாரண குடிமகனிடம் இருக்க வேண்டிய ஒழுக்கமும் கட்டுப்பாடும் அவரிடம் இல்லை, ஒரு பொறுப்பான பதவியில் இருப்பவர் இப்படிப்பட்ட பதவியில் இருப்பவரின் இந்த கேவலமான நடத்தை ஒட்டுமொத்த பொலிஸ் துறைக்கும் அவமானம்.

சந்தேக நபரிடம் பாலியல் இலஞ்சம் கேட்க ஹோட்டலுக்கு சென்றபோது, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான அதிகாரிகளின் வலையில் உப பொலிஸ் பரிசோதகர் சிக்கிக்கொண்டார். இது கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுள்ளது.

மேலே குறிப்பிட்டவை சில சம்பவங்கள் மட்டுமேயாகும். வெளிச்சத்துக்கு வராத சம்பவங்களும் இருக்கக்கூடும். இது முழு பொலிஸாருக்கும் அவமானத்தை ஏற்படுத்தக்கூடியவை. ஆகையால், சட்டத்தைக் காப்போருக்கு ஒழுக்கமும் கட்டுப்பாடும் அவசியமாகும் என்பதை வலியுறுத்துகின்றோம்.




தமிழ்Mirrorக்கு www.tamilmirror.lk

எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

யாவருக்கும் சுயபுத்தி உண்டு. வாழ்க்கையில் புது, புது அனுபவங்களூடாக வருகின்ற பகுத்தறிவை, மிகவும் நுட்பமாகப் பொருத்தமான இடங்களில் பிரயோகிப்பதே சுய புத்தியாகும்.

எல்லா விஷயங்களையும் சொல்லிக் கொடுத்தபடி இருக்க முடியாது. பல விடயங்களை நாங்கள் தேட வேண்டியுள்ளது.

மேலும் தனது முழு முயற்சியுடன் நல்ல முடிவை அறிவதே மகிழ்ச்சிகரமானது. கால மாற்றங்கள் அறிவை, அதன் தேவைகளை எமக்கு உணர்த்தியே தீரும்.

அச்சப்படுவதால் மனிதன் முடிவை எடுக்கத் தயங்குகின்றான். தோல்விகளால் மனிதன் எழுவது எப்படி என உண்மையைத் தனது சுய அனுபவத்தால் அறிந்து கொள்கின்றான்.

உலகில் பல அச்சரியங்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன. அத்துடன் பேரழிவுகள், யுத்தங்கள், பஞ்சம் என பல இடர்களைச் சந்திக்காமல் இருக்கமுடியாது. உலகம் முழுவதிலும் எதுவும் நடக்கலாம். இவற்றைக் கடந்து செல்வதே மனித வாழ்க்கை. சக்தி, துணிவுடன் இயங்குக.

நன்றி- பருத்தியூர் பால.வயிரவநாதன்

## முறையான நீர் முகாமைத்துவம் இன்றி

# வரட்சியில் வாடி வெள்ளத்தில் மூழ்கும் தேசம்

மொஹமட் பாதுஷா

'வானத்தில் இருந்து வருகின்ற ஒரு துளி மழை நீரையும் விவசாயத்திற்கு பயன்படுத்தாமல் வீணே கடலில் கலப்பதற்கு விடமாட்டேன்' என்று பராக்கிரமபாகு மன்னன் கூறினான் என்பதை வரலாற்றுப் புத்தகங்களில் நாம் படித்திருக்கின்றோம். அந்த சிந்தனையிலேயே பராக்கிரம சமுத்திரத்தையும் கட்டுவித்தார் என்பதும் நமக்குத் தெரியும்.

இவ்வாறு இலங்கையில் இருநூற்றுக்கும் மேற்பட்ட பெரிய சிறிய அணைகளும், நீர்த் தேக்கங்களும் உள்ளன. இவை, அளவு மற்றும் நோக்கங்களின் அடிப்படையில் வேறுபட்டாலும் பொதுவாக நீரைச் சேமித்துவைக்கும் பணியையே மேற்கொள்கின்றன. இந்த நீர் மின்னுற்பத்தி, விவசாயம், குடிநீர் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

நமது நாட்டில் இத்தனை நீரணைகளும், நீர்த்தேக்கங்களும் இருந்தாலும் கூட, நீர் அதிகமாகக் கிடைக்கின்ற காலத்தில் அவற்றை முறையாகச் சேமித்து வைத்து, தேவைப்படுகின்ற போது பயன்படுத்தும் 'நீர் முகாமைத்துவ செயன்முறையில்' நமது நாடு இன்னும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றதா என்ற கேள்வி அடிக்கடி எழுவதுண்டு.

கடந்த சில வாரங்களாக நாட்டில் பரவலாக மழை பெய்து வருகின்றது. தலைநகரை அண்டிய பிரதேசங்கள் மற்றும் தென்மாகாணத்தில் மழை பெய்ததைத் தொடர்ந்து மத்திய, வடமத்திய மாகாணங்களிலும் பின்னர் கிழக்கு மாகாணத்திலும் மழை வெள்ளம் ஏற்பட்டிருக்கின்றது.

இதனால், நாட்டிலுள்ள அநேகமான நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. ஒரு சில நீரணைகளில் வெள்ளநீர் நிரம்பி வழிந்ததையும் காண முடிந்தது. இதனால் வெள்ள நீர் கடலை நோக்கி ஓடிச் செல்கின்ற பகுதிகளில் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. பல்லாயிரக் கணக்கான மக்கள் வீடு வாசல்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதில் இருக்கின்ற ஆச்சரியம் என்னவென்றால், 'இப்போது நீர்த் தேக்கத்தில் அளவுக்கதிகமாக நீர் இருக்கின்றது, எனவே திறந்து விடப் போகின்றோம்' என்று சொல்கின்ற அரசாங்கம், இன்னும் ஒரு மாதத்தில் 'வறட்சி காரணமாக நீர் மட்டம் குறைந்துள்ளது. எனவே நீர்ப்பாசனத்திற்கு அல்லது மின் உற்பத்திக்கு நீரை வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது' என்று கூறுவார்கள் என்பதுதான்.

இப்படி இதற்கு முன்னர் பல தடவை நடந்திருக்கின்றது. இனிமேலாவது காத்திரமான திட்டங்கள் முன்னெடுக்கப்படாத விடத்து இனிவரும் காலங்களிலும் இதுவே யதார்த்தமாக இருக்கும் என ஊகிக்க முடிகின்றது.

மூன்று வாரங்கள் பெய்கின்ற மழையை முறையாகத் தேக்கி வைத்து மூன்று, நான்கு மாதங்களுக்கு நாட்டு மக்களின் தேவைக்கேற்ப விநியோகிப்பதற்கு அரச இயந்திரத்திற்கு முடியாது போயுள்ளது. ஒருவேளை, அதனையும் தாண்டி நீர்மட்டம் சடுதியாக அதிகரித்தால் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அதனைக் கடலில் விடுவதற்கான பொறிமுறைகளும் உட்கட்டமைப்புகளும் முறையாக இல்லை என்றுதான் தோன்றுகின்றது. .

ஆகவேதான், மழை வெள்ளத்தில் மூழ்கித் திளைத்துத் திக்குமுக்காடி, சில நாட்களுக்குள்ளேயே மின்சாரத்திற்கும், விவசாயத்திற்கும், குடிநீர் சுத்திகரிப்பும் வழங்க முடியாதளவுக்கு நீர்ப் பஞ்சம் ஏற்படுவதை நாம் தொடராகக் காண்கின்றோம். இது நீர் முகாமைத்துவத்தில் உள்ள குறைபாடு என்றுதானே கூற வேண்டியுள்ளது.

என்னதான் விஞ்ஞானமும் வானவியலும் வளர்ச்சியடைந்தாலும், நம்மால் இயற்கையை வெல்ல முடியாது. ஏன், மழை பெய்யுமா இல்லையா என்பதைக் கூட நூறுவீதம் சரியாக முன்கணிப்பிட முடியாத நிலையிலேயே விஞ்ஞான உலகம் இன்றும் இருக்கின்றது எனலாம். நமக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி அதாவது இறைவனின் நாட்டப்படி அதுவெல்லாம் நடந்து கொண்டிருக்கின்றது.

இதனை யாரும் மறுக்கவில்லை. மலையகத்தில் ஏற்படுகின்ற மண் சரிவுகள், நிலம் கீழ் இறங்குதல் போன்ற அனர்த்தங்களைத் தடுப்பது என்பது மிகக் கடினமானது. ஆனால், இதனைக் குறைக்கலாம். அதற்கு அதிகாரிகள் மற்றும் மக்களின் ஒத்துழைப்பு அவசியமாகின்றது.

இதேவேளை. சம தரைப் பகுதிகள் மற்றும் தாழ் நிலப் பகுதிகளில் ஏற்படுகின்ற சுனாமி தவிர்ந்த ஏனைய சாதாரண மழை வெள்ளம் சார் இழப்புகளைக் குறைத்துக் கொள்ளலாம் என்பதைக் கவனிக்க வேண்டும். அதற்கு நீண்டகால திட்டமிடலும் புத்துசாதுர்யமான நடவடிக்கைகளையும் அரசியல்வாதிகள், அதிகாரிகள் மட்டுமன்றி; மக்களும் மேற்கொள்ள வேண்டும்.

தலைநகர் கொழும்பை எடுத்துக் கொண்டால், அங்கு ஓரளவுக்கு சிறப்பான வடிகான் முறைமை உள்ளது. ஆனால் ஒரு நாள் முழுக்க மழை பெய்தால் கொழும்பின் பல பகுதிகளில் முழங்காலுக்கு மேலால் நீர் போவதைக் காண்கின்றோம். கீழ்த்தட்டு மக்களின் சிறிய வீடுகள் வெள்ளத்தில் மூழ்குவதை நாம் எத்தனையோ தடவை பார்த்திருக்கின்றோம்.

ஒருபொழுது மழையில் ஒரு நாட்டின் தலைநகர் மூழ்குவதைத் தமிழ்நாட்டைப் போல நாமும் சர்வசாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இதனைத் தடுப்பதற்கான திட்டங்கள் குறித்து அரசாங்கம், அரசியல்வாதிகள் தூரநோக்குடன் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

நாட்டில் ஒரு வருடத்தில் இரண்டு. மூன்று தடவைகள் வறட்சி நிலைமை ஏற்படுகின்றது. குறிப்பாக வேளாண்மை உள்ளிட்ட பயிர்ச் செய்கைகளுக்கு நீர்ப்பாசனம் வழங்க முடியாத சூழல் உருவாகுகின்றது. எனவே, பராக்கிரமபாகு மன்னனின் வழியில், முறையாக நீரைச் சேமித்து வைத்து தேவையான போது வழங்கச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஆனால் இந்த நீர் முகாமைத்துவச் செயற்பாடு இலங்கையில் வினைத்திறனாக முன்னெடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகத்தை மாறி மாறி வருகின்ற வெள்ளப் பெருக்குகளும் வறட்சிகளும் ஏற்படுத்திச் செல்கின்றன.

மலைநாட்டிலும் கரையோரப் பகுதிகளிலும் ஏற்படுகின்ற அனர்த்தங்களைப் பொறுத்தமட்டில் வீதி அபிவிருத்தி அதிகார சபை, நீர்ப் பாசனத் திணைக்களம், வனவளத் திணைக்களம், விவசாயத் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ சேவை திணைக்களம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் என பல அரச நிறுவனங்கள் தொடர்புபடுகின்றன. இவற்றுள் ஆயிரக்கணக்கான உத்தியோகத்தர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளர்.

இவர்கள் எதனையுமே செய்யவில்லை என்று கூறுவதற்கு இப் பத்தி முற்படவில்லை. மாறாக, இவ்வாறான இடர்களைக் குறைத்துக் கொள்வதற்கு இன்னும் முன்னேற்றகரமாக வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பதையே வலியுறுத்த விரும்புகின்றது.

சில நாட்கள் மழை பெய்தாலேயே நமது குளங்கள் மட்டுமன்றி நீர்த் தேக்கங்களும் நிரம்பிவிடுகின்றன. அதனைச் சேமித்து வைக்க முடியாது போகின்றது. அவற்றைத் திறந்து விட வேண்டி ஏற்படுகின்றது. இதனால் பல தாழ் நிலக் கிராமங்கள் நீரில் மூழ்கி விடுகின்றன.

ஆனாலொன்று, இன்னும் ஓரிரு மாதத்தில் நாம் நீர் தட்டுப்பாடு என்று கூறத் தொடங்கி விடுவோம். வரட்சி என கூறி வானத்தை பார்த்துக் கொண்டிருப்போம்.

உதாரணமாக, கடந்த சில நாட்களாக மலைநாட்டிலும் கிழக்கு மாகாணத்தில் மேற்குப் புறத்திலும் பெய்த மழை காரணமாக நீர்த் தேக்கங்கள் நிறைந்து வழிந்தன. இதனால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் உள்ள நீர்த் தேக்கங்கள் திறந்து விடப்பட்டுள்ளன. திடீர் வெள்ளம் காட்டாறு போல ஊர்களுக்குள் பரவியுள்ளது.

இதனால் தாழ் நிலப் பகுதிகள் மூழ்கியுள்ளன. பல்லாயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். தென்கிழக்குப் பல்கலைக்கழகம் நீரில் மூழ்கியதால் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன. வீதிகள், வீடுகளில் ஏற்பட்ட சேதம் இன்னும் கணக்கிடப்படவில்லை. வேளாண்மை மற்றும் பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்பட்ட இழப்புகள் சொல்லி மாளாது.

ஆகவே, நீரைக் கூடுமானவரை உயர்ந்த பட்சமாக நீண்டகாலத்திற்குச் சேமித்து வைப்பதற்கும், தேவையான போது அல்லது வறட்சியான காலத்தில் உபயோகிப்பதற்கும் ஏற்றாற்போல் தூரநோக்கிலான திட்டங்களை மேலும் விஸ்தரிக்க வேண்டிய தேவையுள்ளது.

அதேபோல், நீர்த் தேக்கங்களில் இருந்து நீர் பெருமளவில் திறந்து விடப்படுகின்ற போது அது பல ஊர்களைக் கடந்து பல கிலோ மீற்றர் பயணித்தே கடலை அடைகின்றது. எனவே இந்த வழிப்பாதையைச் சீராகப் பேணுவதுடன், இரு மருங்கிலும் உள்ள குடியிருப்புக்களுக்குள் நீர் மேவாத வகையில் ஏற்பாடுகள் செய்வது பற்றியும் சிந்திக்க வேண்டும்.

மிக முக்கியமான ஒரு விடயம். அரச அதிகாரிகள் என்னதான் முயற்சி செய்தாலும் அனர்த்தங்களைக் கட்டுப்படுத்த மக்களின் ஒத்துழைப்பு மிக அவசியம். அவர்களது பொறுப்புணர்வு இங்கு இன்றியமையாதது.

மக்கள் பொறுப்பில்லாமல் நீர் வழிந்தோடும் இடங்களில் மண்போட்டு நிரப்பினால், குளத்தில் உள்ள காணிகளை அபகரித்துக் கொண்டு அதில் வீடு கட்டி குடியேறினால், நீரோடும் வாய்க்கால்களை மூடினால், குப்பை கூழங்களைக் கொட்டினால்.... வெள்ளப் பெருக்கைத் தடுக்க முடியாது. அதனைக் குறிப்பாக அம்பாறை மாவட்டம் இம்முறை உணர்ந்தது எனலாம்.

எனவே, அதிகாரிகள் மட்டுமன்றி மக்களும் பொறுப்புடனும் பொறுப்புக் கூறலுடனும் செயற்படாத விடத்து, அரசாங்கம் என்ன திட்டத்தைக் கொண்டு வந்தாலும் இவ்வாறான அழிவுகளைத் தடுத்து நிறுத்த முடியாது என்பது நினைவிருக்கட்டும்.

## கடிதங்கள்

### கசிப்பை ஒழிக்கவும்

கிளிநொச்சி - கோணாவில் கிராமத்தில் அதிகரித்துள்ள சட்டவிரோத மது உற்பத்தியை முற்றாக ஒழிப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கிராம மக்களும், பொது அமைப்புகளும் கோரிக்கை விடுத்துள்ளன.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 1,100 குடும்பங்கள் வாழ்கின்ற கிராம அலுவலர் பிரிவாக கோணாவில் காணப்படுகின்றது. இங்கு சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதால், பாரிய பிரச்சினைகள் எழுந்துள்ளன என்றும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இக்கிராமத்தில் அதிகரித்துள்ள சட்டவிரோத மது உற்பத்தியினால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றது. அத்துடன், குடும்ப, சமூக வன்முறைகள் அடிக்கடி இடம்பெற்று வருவதாகவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி, அக்கராயன் பொலிஸ் பிரிவுகளுக்கு இடையில் இக்கிராமம் உள்ளதன் காரணமாக சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு இரு பொலிஸாரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

யுனியங்குளம் காடுகளில் சட்டவிரோத மது உற்பத்தி இடம் பெறுகின்றது. இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கினாலும் இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை எனவும் கிராம மக்களால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மேலும், வடக்கில் இடம்பெற்று வரும் சுற்றிவளைப்புகளின்போது, சட்ட விரோதமான முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பெருந்தொகையான கசிப்பு சிக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

- நடராசா கிருஸ்ணகுமார்



யாழ்ப்பாணத்தில்...








ஹட்டனில்...





நாகபூசணி அம்மன் கோவிலில்...



# பொங்கலோ... பொங்கல்...

உழவர் திருநாளாம் தைத்திருநாளை உலகவாழ் இந்துக்கள், வெகு விமர்சையாக திங்கட்கிழமை (15) கொண்டாடினர். சிலர் சூரிய பொங்கல் வைத்தனர். இன்னும் சிலர், வீடுகளுக்குள் பொங்கல் பொங்கி சுவாமிக்குப் படைத்தனர். அத்துடன், இந்து ஆலயங்களில், பொங்கல் விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன.

– தமிழ்மிரர் நிருபர்கள்



காரைதீவில்...



பெரிய நீலாவணையில்...





திருகோணமலையில்...



எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில்...







ஸ்பெயின்

### அரசியலில் முதன்முறை:

# 'மன நலிவு' கொண்ட பெண் எம்.பியானார்



ஸ்பெயின் நாட்டு பாராளுமன்ற வரலாற்றிலேயே முதன்முறையாக டவுன் சிண்ட்ரோம் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். கால்செரன் என்ற அந்தப் பெண்ணின் அரசியல் பிரவேசம் அந்நாட்டின் அரசியல் வரலாற்றில் மட்டுமல்லாது, சர்வதேச அளவில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

ஏனெனில், கால்செரனின் இந்தப் பதவியேற்பு உலகம் முழுவதும் டவுன் சிண்ட்ரோம் பாதிப்பு கொண்டோர் மத்தியில் நேர்மறையான செய்தியைக் கடத்தியுள்ளதாகக் காணப்படுகிறது. அதுவும் டவுன் சிண்ட்ரோம் பாதிப்பு மிதமாக இருப்போருக்கு இது நம்பிக்கை செய்தியாக வந்துள்ளது. ஸ்பெயினில் மட்டுமல்ல, ஐரோப்பியாவிலேயே டவுன் சிண்ட்ரோம் பாதித்த பெண் ஒருவர் பாராளுமன்ற பதவியில் அமர்வது இதுவே முதல் முறை எனக் கூறப்படுகிறது.


இது தொடர்பாக கால்செரன் அளித்த பேட்டியில், "எனது வெற்றி இதற்கு முன்னாள் அரசியல் காணாதது. டவுன் சிண்ட்ரோம் கொண்டவர்களால் மக்களுக்கு சேவை செய்ய முடியும் என்பதை பொதுச் சமூகம் ஏற்றுக் கொள்ளத் தொடங்கியது வரவேற்கத்தக்கது, இது ஒரு நீண்ட பாதையை வகுக்கும்" என்று கூறினார்.

கால்செரனுக்கு இப்போது 45 வயதாகிறது. இவர் தனது 18ஆவது வயதில் கட்சியில் இணைந்தார். நீண்ட காலத்துக்குப் பின்னர் அவர் பாராளுமன்ற உறுப்பினராகியுள்ளார். கடந்த 2013இல் ஸ்பெயினின் கவுன்சிலராக ஆஞ்சலா பாசிலர் என்பவர் தெரிவானார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக வரலாற்றைப் பொறுத்தவரையில் 2019இல் 27 வயதான பிரயான் ரஸ்ஸல் என்ற டவுன் சிண்ட்ரோம் பாதித்த நபர் தேர்தலில் போட்டியிட்டார். தனது வெற்றி மூலம் தன் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சுதந்திரமான இயங்க முடியும் என்பதைப் பறைசாற்ற விரும்புவதாகக் கூறினார். அவர் வெற்றி பெறவில்லை என்றாலும் கவனம் ஈர்த்தார்.

டவுன் சிண்ட்ரோம் (மன நலிவு) என்றால் என்ன? பொதுவாக நம் உடலில் இருக்கும் ஒவ்வொரு செல்லிலும் மரபுப் பண்புகளை உள்ளடக்கிய குரோமோசோம்கள் இருக்கும். வலைப்பின்னல் அமைப்பில் இருக்கும் இவை, ஒவ்வொரு செல்லிலும் 23 ஜோடி என்ற எண்ணிக்கையில் அமைந்திருக்கும். கரு உருவாதலின்போது தாய், தந்தையிடம் இருந்து பெறப்படும் 23 குரோமோசோம்கள் இணைந்து, புதிதாக 23 ஜோடி குரோமோசோம் அமைப்பு உருவாகும். இந்தக் குரோமோசோம் இணைவின்போது தாய் அல்லது தந்தையிடம் இருந்து பெறப்படும் 21ஆவது குரோமோசோமுடன் அதன் நகலும் கூடுதலாகச் சேர்ந்துவிடும். இதனால் 46 குரோமோசோம்களுக்கு பதிலாக, ஒவ்வொரு செல்லிலும் 47 குரோமோசோம்கள் இருக்கும். குரோமோசோம்களின் இந்தப் பிறழ்வுதான் டவுன் சிண்ட்ரோம். இந்தக் குறைபாடு உடைய குழந்தைகளின் உடல், மன வளர்ச்சியில் மந்தத் தன்மை இருக்கும் என்பதால் தமிழில் இது 'மன நலிவு' எனப்படுகிறது.

# மறுமணத்துக்கு துடிக்கும் 112 வயது மூதாட்டி



பொதுவாக வெளிநாடுகளில் நாம் கற்பனைக்கும் எட்டாத பல வினோத சம்பவங்கள் அரங்கேறும். இப்படியெல்லாம் இதுபோன்ற சம்பவங்கள் நடக்குமா என நம்மைக் கேள்வி கேட்க வைக்கும்.

அப்படியொரு வினோதமான சம்பவம் ஒன்று மலேசியாவில் தற்போது நடந்துள்ளது.

மலேசியாவில் தனது 30 கொள்ளு பேரப் பிள்ளைகளுடன் வசித்து வரும் 112 வயதுடைய சிதி ஹவா ஹுசின் என்ற மூதாட்டி தனது மறுமணத்திற்கு மணமகன் தேவை என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எனது முன்னாள் கணவர்களில் சிலர் உயிரிழந்து விட்டனர், மற்றவர்களுக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் நாங்கள் விவாகரத்து பெற்றோம். ஆனால், இப்போது நான் தனிமையில் இருக்கிறேன். எனக்குத் திருமணம் செய்து கொள்ள இப்போது மணமகன் தேவை" என்று தெரிவித்துள்ளார்.

இவர் திருமணத்திற்குத் தயாராக இருந்தாலும் கூட மணமகன்தான் கிடைக்கவில்லை என வேதனையில் தவித்து வருகிறார். மேலும், வயது முதிர்வால் இவருக்கு மறதி சற்று அதிகரித்துவிட்டது. இருந்த போதிலும், இப்போதும் கூட மலேசிய வரலாற்றில் எப்போது என்ன சம்பவம் நடந்தது என்பதைத் துல்லியமாக அவர் கூறுகிறார்.

பெங்களூரு

### மகனை கொன்ற குற்ற உணர்ச்சி இல்லாமல்

# கணவரை தாக்கிய பெண் தொழிலதிபர்



பெங்களூரு - யஷ்வந்தபுரம் ரெசிடன்சி வீதியில் உள்ள ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பில் வசித்து வந்தவர்கள் சுசனா சேத்-வெங்கட்ராமன் தம்பதி. இருவரும் பொறியியலாளர்கள். மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவைச் சேர்ந்த சுசனா சேத், கேரளாவைச் சேர்ந்த வெங்கட்ராமனை காதலித்து திருமணம் செய்து கொண்டார். பின்னர் சுசனா சேத் தனியாக நிறுவனம் ஒன்றை தொடங்கி தொழிலதிபராக வலம் வந்தார். இவர்களுக்கு 4 வயதில் மகன் உள்ளார்.

கருத்து வேறுபாடு ஏற்பட்ட நிலையில் இருவரும் பிரிந்து வாழ்கின்றனர். இருவரும் பெங்களூரு குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி வழக்கு தொடர்ந்துள்ளனர்.

மகன் சின்மயை வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை அன்று பார்க்க வெங்கட்ராமனுக்கு நீதிமன்றம் அனுமதி அளித்திருந்தது.

இதனால் கோபமடைந்த சுசனா சேத், தனது மகனைக் கடந்த 6ஆம் திகதி கோவாவுக்கு அழைத்துச் சென்று படுகொலை செய்தார்.

அவர் தனது மகனின் உடலை சூட்கேசில் வைத்து பெங்களூருவுக்கு காரில் எடுத்து வரும்போது பொலிஸாரிடம் சிக்கினார். அவரை பொலிஸார் தங்கள் காவலில் எடுத்து விசாரித்து வந்தனர். பொலிஸ் காவல் முடிந்து அவரை சிறையில் பொலிஸார் அடைத்தனர்.

அதேபோல் அவரது கணவர் வெங்கட்ராமனையும் நேரில் வரவழைத்து விசாரணை நடத்தி இருந்தனர். இந்த நிலையில் பொலிஸார் சுசனா சேத்தையும், வெங்கட்ராமனையும் ஒன்றாக வைத்து விசாரணை நடத்தியதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளது. தனது மகனைக் கொன்ற குற்ற உணர்ச்சி கொஞ்சமும் இல்லாத சுசனா சேத், தன்னுடைய கணவர் மீது காட்டிய கோபத்தைப் பார்த்து பொலிஸார் அதிர்ந்து போனார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் வெங்கட்ராமனை சுசனா சேத் தாக்கியதாகவும், அதையடுத்து இருவரும் கைகலப்பில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தஞ்சாவூர்

# பொங்கல் பொங்கிய சுற்றுலாப் பயணிகள்



தஞ்சாவூரில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பொங்கல் விழாவைத் தமிழக பாரம்பரிய முறைப்படி உற்சாகமாக ஞாயிற்றுக்கிழமை (14) கொண்டாடி மகிழ்ந்தனர்.

தஞ்சாவூர் அருகே நாஞ்சிக்கோட்டை முனியாண்டவர் கோயில் வளாகத்தில், தமிழ்நாடு சுற்றுலாத் துறை, சுற்றுலா வளர்ச்சிக் குழுமம் மற்றும் தென்னகப் பண்பாட்டு மையம் சார்பில், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கான பொங்கல் விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் தீபக் ஜேக்கப் தலைமை வகித்தார். விழாவுக்கு வந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு மாலை அணிவித்து, வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர், அவர்கள் மாட்டு வண்டிகளில் ஏறி கிராமத்தை வலம் வந்தனர். அப்போது, பெண்கள் வீடுகளின் முன்பு வண்ணக் கோலமிட்டு, வெளிநாட்டினரை வரவேற்றனர்.







### நடப்பாண்டின் சம்பியன் மகுடத்தை

# லியோ கிங்ஸ் தனதாக்கியது

கற்பிட்டி பிரீமியர் லீக் தொடரின் 7ஆவது அத்தியாயத்தின் இறுதிப் போட்டியில் மஹஸீன்ஸ் கழகத்தினை 5 விக்கெட்டுக்களால் வீழ்த்திய லியோ கிங்ஸ் கழகம் நடப்பாண்டின் சம்பியன் மகுடத்தினை தனதாக்கிக் கொண்டது.

கற்பிட்டி கிரிக்கெட் கழகங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த 6 அணிகளைக் கொண்ட கற்பிட்டி பிரீமியர் லீக் தொடரின் 7ஆவது அத்தியாயத்தின் லீக் ஆட்டங்கள் கடந்த 5,6 மற்றும் 7ஆம் திகதிகளில் இடம்பெற்றிருந்தன. ஓர் அணிக்கு 15 வீரர்கள் என்றடிப்படையில் ஏலம் விடப்பட்டு, ஓர் அணி ஒரு இலட்சம் ரூபாய்களுக்கு வீரர்களை கொள்வனவு செய்திருந்தமைகுறிப்பிடத்தக்கது.

அதற்கமைய லியோ கிங்ஸ், மஹஸீன்ஸ், பூம்ஸ், கங்காரூஸ், எம்.டி.எம் மற்றும் ரைசிங் ஸ்டார்ஸ் ஆகிய 6 அணிகள் இத் தொடரில் பங்கேற்றிருந்தன. இந்த ஆறு அணிகளும் முதல் லீக் சுற்றில் மற்றைய அணியுடன் ஒரு போட்டியில் பங்கேற்றிருக்க முதல் 4 இடங்களைப் பெறும் அணி அடுத்த சுற்றுக்கு தெரிவாகியிருந்தது.

பின்னர் இந்தியன் பிரீமியர் லீக் தொடரைப் போன்று முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் குலிபயர் 1 போட்டியிலும் 3 மற்றும் 4ஆம் இடங்களைப் பெறும் அணிகள் எலிமினேட்டர் போட்டியிலும் பங்கேற்கும் வண்ணம் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய குலிபயர் 1 போட்டியில் வெற்றி பெற்ற லியோ கிங்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு தெரிவானது. பின்னர் இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியில் ஏற்கெனவே குலிபயர் போட்டியில் தோற்ற மஹஸீன்ஸ் அணி எலிமினேட்டர் போட்டியில் வென்ற ரைசிங் ஸ்டார்ஸ் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இந்நிலையில், இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மஹஸீன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட்டத்தை தெரிவு செய்தது. இதற்கமைய களம் நுழைந்த மஹஸீன்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரர்களை லியோ கிங்ஸ் அணியின் பந்துவீச்சாளரான சாஜித் நிலைக்க விடாமல் செய்ய 8 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 81 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது மஹஸீன்ஸ் அணி. துடுப்பாட்டத்தில் சத்துரங்க 16 ஓட்டங்களை பெற்றார். பந்துவீச்சில் சாஜித் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் சவால் மிக்க இலக்கை நோக்கி பதிலளித்த லியோ கிங்ஸ் அணி வெறும் 6 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 82 ஓட்டங்களை பெற்று 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றதுடன் நடப்பு ஆண்டின் கற்பிட்டி பிரீமியர் லீக் தொடரின் சம்பியன் மகுடத்தினை தனதாக்கிக் கொண்டது. துடுப்பாட்டத்தில் சாஜித் 27 ஓட்டங்களை விளாசினார்.

பந்துவீச்சில் சபான் 3 விக்கெட்டுகளை சாய்ந்தார். இப் போட்டித் தொடரில் சிறப்பாட்டக் காரருக்கான விருதினை லியோ கிங்ஸ் அணியின் பஜீல் பெற்றதுடன் இறுதிப் போட்டியின் நாயகனாக அதே அணியின் சாஜித்தும் தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

- ரஸீன் ரஸ்மின்

இந்தூர்

### சர்வதேச டி20 கிரிக்கெட்டில்

# அதிக முறை டக் அவுட் விபரம்



சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் ரோகித் சர்மா மோசமான சாதனை படைத்துள்ளார். அதிக முறை டக் அவுட் ஆன வீரர்களில் இரண்டாவது இடத்தில் தற்போது அவர் உள்ளார்.

36 வயதான ரோகித் சர்மா கடந்த 2007 முதல் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணிக்காக விளையாடி வருகிறார். இதுவரை 150 டி20 போட்டிகளில் விளையாடி 3,853 ஓட்டங்களை குவித்துள்ளார். 4 சதங்கள் மற்றும் 29 அரைசதங்கள் இதில் அடங்கும்.

அதிக சர்வதேச டி20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிய வீரராகவும் அறியப்படுகிறார். அதேநேரத்தில், 12 முறை டக் அவுட் ஆகியுள்ளார். இதன் மூலம் சர்வதேச டி20 கிரிக்கெட்டில் டக் அவுட் ஆன வீரர்களில் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

கடந்த 2022ஆம் ஆண்டு நடைபெற்ற டி20 உலகக் கோப்பை தொடருக்கு பிறகு தற்போது ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான டி20 தொடரில் ரோகித் விளையாடி வருகிறார். இந்த தொடரின் முதல் இரண்டு போட்டிகளிலும் அவர் டக் அவுட் ஆகியுள்ளார்.

சர்வதேச டி20 கிரிக்கெட்டில் அதிக முறை டக் அவுட் ஆன வீரர்கள்:

ஸ்டிர்லிங் - 13 முறை (அயர்லாந்து)
ரோகித் சர்மா - 12 முறை (இந்தியா)
ஓ'பிரைன் - 12 முறை (அயர்லாந்து)
டேனியல் அனெஃபி - 11 முறை (கானா)
ஸேப்பி - 11 முறை (ரூவாண்டா)

### அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்

# ஜோகோவிச், வோஸ்னியாக்கி வெற்றி

அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியின் முதல்சுற்றில் செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச், டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி ஆகியோர் வெற்றிபெற்று அடுத்த சுற்றில் நுழைந்துள்ளனர்.

ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்பர்னில் நேற்று தொடங்கியது. ஞாயிற்றுக்கிழமை (14) நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் நோவக் ஜோகோவிச் 6-2, 6-7, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் குரோஷியா வீரர் டினோ பிரிஸ்மிக்கை வீழ்த்தி அடுத்த சுற்றில் நுழைந்தார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி, போலந்து வீராங்கனை மக்டா லினெட்டுடன் மோதினார். இதில் வோஸ்னியாக்கி 6-2, 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தபோது லினெட் பாதியில் விலகினார். இதையடுத்து, வோஸ்னியாக்கி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 16 , ஜனவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.